# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 34/2020**

பெயர் : சாந்தி நாள் : 14.11.2022

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பி.வா.சா.1 – சாந்தி - சத்திய பிரமாணத்தின் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வாதிகள் ரங்கையகவுண்டர் என்பவரின் வாரிசுகள் என்றால், சரிதான். ரங்கையகவுண்டர் மனைவி பெயர் மாராயி என்றால், சரிதான். ரங்கையகவுண்டருக்கு மாராயி மற்றும் ராசம்மாள் என்று இரண்டு மனைவிகள். ரங்கையகவுண்டருக்கும் பெருமாள்கவுண்டருக்கும் என்ன உறவுமுறை என்றால், பங்காளிகள் உறவுமுறையாகும். ரங்கையகவுண்டரும், பெருமாள்கவுண்டரும் தங்களுக்குள் எந்த பரிவர்த்தனையும் செய்து கொள்ளவில்லை என்று சொன்னால், சரியல்ல. கடந்த 1980ம் ஆண்டு காடுகளை கிரையம் செய்து கொண்டார்கள். மேற்படி கிரைய ஆவணங்கள் குறித்து எப்போது தெரிய வந்தது என்றால், எனக்கு 10 வயது இருக்கும்போதே தெரியும்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.சா.வா.1ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /சாந்தி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.